# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI

CC.No.187/2024 தேதி 16.03.2026

PW- 1 – திரு. சுதாகர், 42/2026 , த/பெ. கருப்பையா

**(எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் குவிமுச பிரிவு 311 ன் கீழ் சாட்சியை திரும்ப அழைக்க மனுதாக்கல் செய்து அது Crmp 5252/2025 தேதி 08.01.2026 அன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.)**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு.அகிலன், Junior Assistant என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விநாயகர் எப்போது நடந்தது என்றால் 20.09.2015. அந்த ஊர்வலம் எங்கள் ஊரில் உள்ள இளைஞர்களால் நடத்தப்பட்டது என்றால் சரிதான். அந்த ஊர்வலதை நான் தான் தலைமையேற்று நடத்தினேன் என்றால் இல்லை, ஊரில் உள்ள அனைவரும். சம்பவத்தின்போது நான் இளைஞர்மன்ற தலைவராக இருந்தேனா என்றால் இல்லை. விநாயகர் ஊர்வலத்தை எங்கிருந்து எப்போது கரைக்கு எடுத்துச் சென்றோம் என்றால் நெய்வேலி பஸ் ஸ்டாப்லிருந்து 20.09.2015 காலை 11.00 மணியளவில். ஊர்வலத்தில் சுமார் 200 நபர்கள் கலந்துகொண்டனர். நான் கொடுத்த புகாரில் 200 நபர்கள் கலந்து கொண்ட விபரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். ஊர்வலம் நடத்த காவல் நிலையத்தில் அனுமதி பெற்றோமா என்றால் பெற்றோம். போலிஸ் பாதுகாப்பு கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். எத்தனை

போலிஸ் வந்தார்கள் என்றால் 1 போலிஸ். பாதுகாப்பிற்கு வந்த போலிஸீற்கு ஊர்வலத்தில் நடந்த விபரம் தெரியுமா என்றால் அவர் சம்பவ இடத்தில் இல்லை. போலிஸிடம் நான் தான் புகார் கொடுத்தேனா என்றால் மருத்துவமனையில் இருந்தபோது வாக்குமூலம் கொடுத்தேன். சம்பவத்தினத்தன்றே நான் புகார் கொடுத்துவிட்டேன் என்றால் மறுநாள் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகாரில் எத்தனை நபர்கள் மீது புகார் கொடுத்தேன் என்றால் 6 நபர்கள். எனக்கு எங்கு காயம் ஏற்ப்பட்டது என்றால் இடது கை மணிக்கட்டு. செல்லதுரைக்கு தலையில் மற்றும் வலது உள்ளங்கையில் காயம். 2 பேருக்கும் இரத்தக்காயம் என்றால் சரிதான். எங்கள் துணியில் இரத்தக்கறை ஏற்ப்பட்டது என்றால் சரிதான். போலிசாரிடம் புகார் கொடுத்தபோது போலிஸார் இரத்தகறை துணிகளை பார்வையிட்டார்களா என்றால் சம்பவ இடத்தில் சட்டை கிழிந்து விட்டதால் கைலியுடன் தூக்கிவந்ததார்கள். போலிஸார் இரத்தக்கறை துணிகளை கைப்பற்றினார்களா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எப்படி காயம் ஏற்ப்பட்டது என்றால் கம்பு மற்றும் பைப்பால் பாலமுருகன், திருமுருகன் அடித்தார்கள். எதிரிகள் வரும்போது கம்பை கொண்டு வந்தார்களா என்றால் தெரியாது. எதிரிகள் கையில் 3 அடி கம்பால் என்னை அடித்தார்கள். எத்தனை கம்பு கொண்டுவந்தார்கள் என்றால் பிளாஸ்டிக் பைப் 3 அடியில் ஒன்று. சம்பவம் நடந்த பிறகு நான் மயக்கம் அடைந்துவிட்டேன் என்றால் சரிதான்.

போலிஸாரிடம் நான் மயக்க மடைந்த விபரத்தை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். சம்பவத்தை யார் யார் பார்த்தது என்றால் அங்கிருந்த அனைவருக்கும் தெரியும். போலிஸாரிடம் அருகில் உள்ள வீட்டுக்காரர்களுக்கும் மற்றும் ஊர்காரர்களுக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வழக்கு தொடர்பாக அருகில் உள்ள வீட்டுக்காரர்கள் மற்றும் ஊர்காரர்கள் ஆகியோரை

போலிஸார் விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கிற்கு முன்பே எதிரிகளுக்கும் எங்களுக்கும் விநாயகர் ஊர்வலம் தொடர்பாக முன் விரோதம் உள்ளது என்றால் சரியல்ல. 20.09.2015 மதியம் 02.30 மணிக்கு 3 வது எதிரியின் மகன் ரெங்கராஜ் என்பவரை நான், செல்லதுரை, சரவணன், தேவேந்திரன், சுப்பையா தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாக வாட்டாத்திக்கோட்டை காவல் நிலையத்தில் குற்ற எண் 196/2015 புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவுபெற்று நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு தகராறு ஏற்ப்பட்டது என்றால் 11.00 மணிக்கு தாரை தப்படை அடிக்க கூடாது என்று தடுத்து பின்பு 02.00 மணிக்கு எங்களை அடித்தார்கள். எதிரிகள் அடித்து எனக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும் நாங்கள் தான் 3 வது எதிரியின் மகனை அடித்தோம் என்றாலும் எதிரிகள் கெட்ட வார்த்தையால் பேச வில்லை, அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. குற்ற எண் 196/2015 வழக்கிலிருந்து தப்பிபதற்காக பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

**ஓம்/- திரு.த.சுதர்சன்** M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.